வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959    Reg. No. : P. 1632    விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu    ஈழநாடு




Email : eelanaduweekly@gmail.com    மலர் : 07    16.03.2026 திங்கட்கிழமை    இதழ் : 69    பக்கங்கள் : 08

### நெருக்கடி நிலைமையின்போது

## மக்களை நெறிப்படுத்தும் பொறுப்பிலிருந்து அரசாங்கம் ஒருபோதும் தடம் மாறி செல்லாது

### ஜனாதிபதி அநுரகுமார உறுதி!

**சுகாதாரம், கல்வி, கைத்தொழில், விவசாயம் மற்றும் கடற்றொழில் போன்ற துறைகள் மீது கூடிய கவனம்.**

**டிஜிற்றல் குறியீட்டு முறையை மேம்படுத்த உடனடி நடவடிக்கை நெருக்கடி நிலைமையை எதிர்கொள்ள வீட்டிலிருந்தே வேலை செய்லது பற்றி சிந்தித்தல்.**



*கொழும்பு, மார்ச் 16*

மத்திய கிழக்கின் போர்ச் சூழலுக்கு மத்தியில், நாடு எதிர்கொள்ளும் சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளும் வகையில் மாற்று வழிமுறைகளை முறையான திட்டமிடலுடன் நடைமுறைப்படுத்துவதன் மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு ஏற்படும் பாதிப்பைக் குறைத்துக் கொள்ள முடியும் என்று குறிப்பிட்ட ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க, அரச துறையிலுள்ள ஒவ்வொரு துறையினரும் தனித்தனியாக முடிவெடுக்காமல், மக்கள் நலன் சார்ந்து கூட்டுப் பொறுப்புடன்

07

## மாகாண சபை தேர்தல் இந்த வருட இறுதியில்!

*கொழும்பு, மார்ச் 16*

நீண்ட காலமாக ஒத்திவைக்கப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தலை இவ்வருட இறுதிக்குள் நடத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது. அத்துடன், எதிர்வரும் ஜூன் மாதத்துக்கு முன்னர் தேர்தலுக்கான திகதி மற்றும் எந்த முறைமையின் கீழ் தேர்தலை நடத்துவது என்பது குறித்த உத்தியோகபூர்வ அறிவிப்பை வெளியிடவும் அரசு திட்டமிட்டுள்ளது.

இந்த உத்தேசித்த மாகாண சபைத் தேர்தலில், புலம் பெயர்ந்து வாழும் இலங்கையர்களுக்கும் வாக்களிக்க சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளது என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

மாகாண சபைத் தேர்தலை எந்த முறைமையின் கீழ் நடத்துவது என்பது குறித்து ஆராய்வதற்காக அமைச்சர் விஜித ஹேரத் தலைமையில் ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ள குழு இவ்வாரம் கூடவுள்ளது.

இக்கூட்டத்தின் போது தேர்தல் முறைமை மற்றும் புலம்பெயர் இலங்கையர்களுக்கான வாக்குரிமை தொடர்பான பரிந்துரைகள் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்படவுள்ளது.

இது தொடர்பான முக்கிய அறிவிப்புகள் நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ள பாராளுமன்ற அமர்வுகளின் போது அரச தரப்பால்

07

## ஹோர்முஸ் நீரிணையை திறக்குமாறு சர்வதேச நாடுகளுக்கு ட்ரம்ப் அழைப்பு



*நியூயோர்க், மார்ச் 16*

ஈரானால் முடக்கப்பட்டுள்ள ஹோர்முஸ் நீரிணையை மீண்டும் பாதுகாப்பாகத் திறப்பதற்கு, அமெரிக்காவுடன் இணைந்து கப்பல்களை அனுப்பி ஒத்துழைக்குமாறு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அழைப்பு விடுத்துள்ளார்.

பிரித்தானியா உள்ளிட்ட நாடுகளுக்கு இந்த

07

## எரிபொருள் தட்டுப்பாட்டைத் தவிர்க்க இந்தியா, ரஷ்யாவுடன் அரசு ஒப்பந்தம்

*கொழும்பு, மார்ச் 16*

எரிபொருள் தட்டுப்பாட்டைத் தவிர்க்க இந்தியா மற்றும் ரஷ்யாவுடன் அவசர ஒப்பந்தம் ஒன்றை செய்து கொள்ள அமைச்சரவை அனுமதி கோரப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கில் நிலவும் போர்ச் சூழலால் உலகளாவிய எரிபொருள் விநியோகச் சங்கிலி பாதிக்கப்பட்டுள்ளதைக் கருத்திற்கொண்டு, எதிர்வரும் ஏப்ரல் மற்றும் மே மாதங்களுக்குத் தேவையான எரிபொருளைப் பெற்றுக்கொள்ள இந்தியா மற்றும் ரஷ்யாவுடன் நேரடி இராஜதந்திரப் பேச்சுவார்த்தைகளை

07

## 9 ஆண்டுகளாக மக்களின் அடிப்படை உரிமை மறுப்பு

### தேர்தலை நடத்த கரு ஜயசூரிய வலியுறுத்து

*கொழும்பு, மார்ச் 16*


மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படாமல் கடந்த 9 ஆண்டுகளாக நாட்டு மக்களின் அடிப்படை உரிமை மறுக்கப்பட்டுள்ளமை அநீதியான செயலாகும் என்று முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்-

குறிப்பாக, வடக்கு மற்றும் கிழக்கு மாகாண

07

## மத்திய கிழக்கில் போரை நிறுத்த பாப்பரசர் அழைப்பு!



*வத்திக்கான், மார்ச் 16*

மத்திய கிழக்கு - வளைகுடா போரின் காரணமாக போரில் ஈடுபடாத அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழக்க வேண்டிய ஏற்பட்டுள்ளதுடன் இலட்சக்கணக்கான மக்கள் ஏதிலிகளாகப் புலம்பெயர வேண்டிய நிலமை

07

## வைத்தியசாலைகளுக்கு செல்லக்கூட முடியவில்லை

### எரிபொருள் ஒதுக்கீடு குறித்து வைத்திய அதிகாரிகள் சங்கம் கவலை

*கொழும்பு, மார்ச் 16*

அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ள எரிபொருள் அனுமதிப்பத்திர (கியூ.ஆர்) முறையின்கீழ் வழங்கப்படவுள்ள எரிபொருள் அளவு போதுமானதல்ல என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

புதிய முறையின்கீழ் முன்மொழியப்பட்டுள்ள எரிபொருள் ஒதுக்கீடு, சுகாதார சேவையைத்

07

## எரிபொருள் நிலையங்களுக்கு விசேட பாதுகாப்பு

*கொழும்பு, மார்ச் 16*

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் ஞசு குறியீட்டு முறை மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, அங்கு ஏற்படும் வாகன நெரிசலைக் கட்டுப்படுத்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக போக்குவரத்துப் பிரிவு மற்றும் வீதி பாதுகாப்புப் பொறுப்பதிகாரியான பிரதிப் பொலிஸ் மா அதிபர் டப்ளியூ.பி.ஜே. சேனாதீர தெரி வித்துள்ளார்.

பொதுமக்களிடையே ஏற்பட்டுள்ள தேவையற்ற பதற்றம் காரணமாக எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அருகில் பாரிய வாகன

07

## கியூ.ஆர் முறைமையால் நேற்று முதல் சீரடைந்தது எரிபொருள் விநியோகம்!

*யாழ்ப்பாணம், மார்ச் 16*

நாடெங்கிலுமுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கியூ. ஆர் முறைமை அடிப்படையில் நேற்று முதல் எரிபொருள் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதனால் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வரிசை நெருக்கடி ஓரளவுக்குக் குறைந்ததைக் காண முடிந்தது.

மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள மோதல் நிலமை காரணமாகப் பொதுமக்களிடையே எரிபொருள் விநியோகம் குறித்த அச்சத்தைப் போக்கும்

07

## அடுத்தமாத இறுதி வரை எரிபொருள் கையிருப்பு!

*கொழும்பு, மார்ச் 16*

மத்திய கிழக்கில் போர்ப் பதற்றம் அதிகரித்தாலும், இலங்கையில் அடுத்த மாத இறுதிவரை தேவையான எரிபொருள் கையிருப்பில் உண்டு. அளவாகக் கொள்முதல் செய்ய வேண்டும் என்பதற்காகவே கியூ. ஆர் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் டி.ஜே. ராஜகருணா தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விநியோகம் குறித்த நிலைமையைத் தெளிவுபடுத்தும் வகையில் நேற்று

07

## ஏப்ரல் 02 முதல் அரச ஊழியர்களின் வருடாந்த இடமாற்றங்கள் ஆரம்பம்

*கொழும்பு, மார்ச் 16*

2026 ஆம் ஆண்டுக்காக அரச சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்ட அனைத்து இடமாற்றங்களும் ஏப்ரல் மாதம் 02 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என அரச சேவை ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இடமாற்றங்கள் அமுலாகும் திகதி குறிப்பிடப்படாத அனைத்து இடமாற்ற உத்தரவுகளும், குறித்த திகதியிலிருந்தே நடைமுறைக்கு வர வேண்டும் என ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இடமாற்றங்கள் தொடர்பாக

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரத்துக்கு 35 லீற்றர் பெற்றோல் வேண்டும்!

## ஓட்டோ சாரதிகள் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 16

வாரம் ஒன்றுக்கு 15 லீற்றர் என்பது எவ்வகையிலும் போதுமானதல்ல. வாரத்திற்கு எங்களுக்கு குறைந்தபட்சம் 80 லீற்றர் தேவைப்படுகிறது. ஆனால், நாட்டின் தற்போதைய நிலைமையைக் கருத்திற்கொண்டு, குறைந்தபட்சம் 35 லீற்றர் எரிபொருளையாவது வழங்குமாறு தேசிய டெக்சி எப் முச்சக்கர வண்டி சாரதிகளின் ஒன்றியத்தின் தலைவர் ஜெஸ்மின் லங்கா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- மத்திய கிழக்கு போர்ச் சூழலில் கப்பல் போக்குவரத்து தடைபட்டுள்ள நிலையில், எம்மைப் போன்ற நாடுகளுக்கு எரிபொருளை இறக்குமதி செய்வது பெரும் சவாலாக உள்ளது. இத்தகைய தருணத்தில் எரிபொருளுக்கு கோட்டா முறைமையை மீண்டும் அறிமுகப்படுத்தியது வரவேற்கத்தக்கது.

இல்லையெனில், பணம் படைத்தவர்கள் பீப்பாய் கணக்கில் எரிபொருளைச் சேமித்து வைத்துக்கொண்டு, ஏனையவர்களுக்குத் தட்டுப்பாட்டை ஏற்படுத்திவிடுவார்கள். எனவே, அரசின் இந்த முடிவுக்கு நான் மதிப்பளிக்கிறேன்.

ஆயினும், இதில் ஒரு நடைமுறைச் சிக்கல் உள்ளது. குறிப்பாக செயலிகள் மூலம் தொழில் செய்யும் எங்களைப் போன்ற ஓட்டுநர்களுக்கு, ஒரு நாளைக்குக் குறைந்தது 8 முதல் 10 லீற்றர் எரிபொருள் தேவைப்படுகிறது.


தற்போது அறிவிக்கப்பட்டுள்ளபடி வாரத்திற்கு 15 லீற்றர் என்றால், ஒரு நாளைக்கு சுமார் 2 லீற்றர் மட்டுமே கிடைக்கும். 2 லீற்றர் எரிபொருளை வைத்துக்கொண்டு ஒரு நாளில் சுமார் 50 கிலோமீற்றர் வரை பயணிக்கலாம். வாரம் ஒன்றுக்கு 15 லீற்றர் என்பது எவ்வகையிலும் போதுமானதல்ல. வாரத்திற்கு எங்களுக்கு குறைந்தபட்சம் 80 லீற்றர் தேவைப்படுகிறது. ஆனால், நாட்டின் தற்போதைய நிலைமையைக் கருத்திற்கொண்டு, குறைந்தபட்சம் 35 லீற்றர் எரிபொருளையாவது வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

ஒரு நாளைக்கு 2,100 ரூபாய் வருமானம் கிடைத்தால், அதில் 15 சதவீதத்தை நிறுவனத்திற்கு கொமிஷனாக வழங்க வேண்டும். மீதமுள்ள பணத்தை வைத்துக்கொண்டு நாங்கள் எப்படி வாழ்வது? குழந்தைகளின் கல்விச் செலவுகள், வகுப்புக் கட்டணங்கள் மற்றும் கடன்களை எங்களால் எப்படிச் செலுத்த முடியும்?

கடந்த முறை கிவ்ஆர் முறையை பயன்படுத்திய போது, கிவ்ஆர் மூலம் 2 லீற்றர் குறைத்துவிட்டு, முழுமையாக எரிபொருள் நிரப்புவதற்கு எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியருக்கு 500 அல்லது 1000 ரூபாய் வழங்க வேண்டியிருந்தது.இவ்வாறான கோட்டா முறையினால் ஏற்படும் முறைகேடுகளை அரசாங்கம் கவனிக்க வேண்டும்.

எங்களை வீதிக்கு இறக்க வேண்டாம்-என்றார். (அ)

## காரைநகர் சுற்று வட்ட வீதி அபிவிருத்தி



யாழ்ப்பாணம், மார்ச் 16

யாழ்ப்பாண மாவட்டத்தின் வீதிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கில் பொதுமக்களின் வரிப்பணத்தை பயன்படுத்தி செயற்படுத்தப்படும் “மறுமலர்ச்சிக்கான பாதை“ நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படும் திட்டத்திற்கான நிர்மாணப் பணிகள் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டன.

அதனடிப்படையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ள போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் நகர மேம்பாட்டு அமைச்சர் பிமல் ரத்நாயக்க காரைநகர் சுற்று வட்ட வீதி அபிவிருத்தி பணிகளை நேற்று உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

கடற்றொழில் நீரியல் வளங்கள் அமைச்சர் இ.சந்திரசேகர், வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிகாரிகள், பிரதேசசபை தவிசாளர், உறுப்பினர்கள், பொதுமக்கள் பலர் நிகழ்வில் கலந்துகொண்டனர். (அ)

## கொழும்பு இந்து அபார வெற்றி!

கொழும்பு, மார்ச் 16

கொழும்பில் நடைபெற்ற இந்துக்களின் பெருஞ்சமர் கிரிக்கெட் ஆட்டத்தில், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியை 5 விக்கெட்டுகளால் வீழ்த்தி கொழும்பு இந்துக் கல்லூரி அபார வெற்றி பெற்றுள்ளது.

கொழும்பு பி. சரவணமுத்து சர்வதேச விளையாட்டு மைதானத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற இந்தப் போட்டியின் மூலம் இரு அணிகளுக்கிடையிலான தொடரின் மொத்த ஆட்ட கணக்கு 4-4 என்ற சமநிலையை எட்டியுள்ளது.

தனது 75ஆவது ஆண்டு பவள விழாவைக் கொண்டாடிவரும் கொழும்பு இந்துக் கல்லூரிக்கு இந்த வெற்றி இரட்டிப்பு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி தனது முதல் இன்னிங்ஸில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 102 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கொழும்பு இந்துக் கல்லூரி 119 ஓட்டங்களைச் சேர்த்து முன்னிலை பெற்றது.

தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, எதிரணியின் கட்டுப்பாட்டான பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் 98 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனையடுத்து 82 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த கொழும்பு இந்துக் கல்லூரி, 5 விக்கெட்டுகளை இழந்து இலக்கை எட்டியது.

தொடக்க துடுப்பாட்ட வீரர் திவாகரன் யாதவ் 120 பந்துகளை எதிர்கொண்டு ஆட்டமிழக்காமல் 34 ஓட்டங்கள் பெற்று அணியின் வெற்றியை உறுதிப்படுத்தினார். அவருக்கு துணையாக வேலாந்துரை அபிநேஷ் 22 ஓட்டங்களையும் ரஞ்சித் குமார் அகிலேஷ் 11 ஓட்டங்களையும் சேர்த்தனர்.

பந்துவீச்சில் கொழும்பு இந்துக் கல்லூரி அணியின் சுபர்ணன் மற்றும் யுவராஜ் ஆகியோர் முறையே 6 மற்றும் 5 விக்கெட்டுகளை கைப்பற்றி எதிரணியை திணறடித்தனர். போட்டியின் நாயகனாக திவாகரன் யாதவ் தெரிவு செய்யப்பட்டதுடன், சிறந்த துடுப்பாட்ட வீரராக சுதர்சன் சுபர்ணன், சிறந்த பந்துவீச்சாளராக விஸ்வநாதன் யுவராஜ் மற்றும் சிறந்த களத்தடுப்பாளராக கனகராஜ் நித்தீஸ் ஆகியோர் விருதுகளை வென்றனர். (அ)

## டித்வா புயலால் பாதிக்கப்பட்ட 14 குடும்பங்களுக்கு நஷ்டஈடு!

யாழ்ப்பாணம், மார்ச் 16

கடந்த வருடம் ஏற்பட்ட டித்வா புயலால் பாதிக்கப்பட்ட 14 குடும்பங்களுக்கு நேற்று தலா 2 இலட்சம் ரூபா வீதம் வழங்கிவைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வுகள் வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்திலும், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகத்திலும் இடம்பெற்றுள்ளன.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகத்தில் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், வடமராட்சி ஒருங்கிணைப்புக் குழு தலைவருமான ரஜீவன் ஜெயனந்தமூர்த்தி கலந்து கொண்டு பாதிக்கப்பட்ட 5 குடும்பங்களுக்கும், வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் நடராசா திருலிங்கநாதன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்விலும் பாராளுமன்ற உறுப்பினரும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான ரஜீவன் ஜெயசந்திரமூர்த்தி கலந்து கொண்டு 7 பேருக்கு தலா 2 இலட்சம் வீதம் காசோலைகளை வழங்கி வைத்தார்.

குறித்த நிகழ்வுகளில் தேசிய மக்கள் சக்தியின் வடமராட்சி அமைப்பாளர் ரூபன், தேசிய மக்கள் சக்தியின் பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் புலோலியூர் ரமணன், மற்றும் தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள், வடமராட்சி வடக்கு மற்றும் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகம் ஆகியவற்றின் அதிகாரிகளும் அந்தந்த பிரதேச செயலகங்களில் இடம்பெற்ற நிகழ்வுகளில் கலந்து கொண்டனர். (அ)

## நீர் விநியோகம் தடை

களுத்துறை, மார்ச். 16

கெத்ஹேனவிலிருந்து களுத்துறை வரையிலான பிரதான நீர் விநியோகக் குழாயில் ஏற்பட்ட கோளாறினால் களுத்துறையின் பல பகுதிகளுக்கு நீர் விநியோகம் தடைப்பட்டுள்ளது என்று தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது.

இதனால் வஸ்கடுவ, மொல்லிகொட, மொரோந்துடுவை, களுத்துறை வடக்கு, களுத்துறை தெற்கு, நாகொடை, கட்டுகுருந்த மற்றும் போம்புவல ஆகிய பகுதிகளுக்கு நீர் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது என்று தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது. (எ)

## சிறுவர் பாதுகாப்பு கட்டமைப்பை வலுப்படுத்த விசேட நடைமுறை

கொழும்பு, மார்ச் 16

இலங்கையில் சிறுவர் பாதுகாப்பு கட்டமைப்பை வலுப்படுத்தும் நோக்கில், ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் பிரகடனத்தின் கீழ் உள்ள விசேட நடைமுறை ஒன்றை அங்கீகரிப்பது குறித்து இலங்கை அரசாங்கம் இந்த வாரம் தீர்மானிக்கவுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வழங்கிய பரிந்துரையின் அடிப்படையில், மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு இது தொடர்பான ஆய்வுகளை முன்னெடுத்து வருகிறது.

இந்த சர்வதேச நடைமுறையை இலங்கை ஏற்றுக்கொண்டால், உள்நாட்டில் நீதி மறுக்கப்படும் சந்தர்ப்பங்களில், பாதிக்கப்பட்ட சிறுவர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் குழுவிடம் நேரடியாக முறையிடும் வாய்ப்பு உருவாகும்.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள அமைச்சின் செயலாளர் தரங்கணி விக்கிரமசிங்க, இந்த முன்மொழிவை அமைச்சும் சாதகமாகவே பார்ப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறெனினும், தற்போதுள்ள உள்நாட்டுச் சட்டங்களுக்கு அமைய இதனை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது குறித்து மேலதிக கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (அ)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
16.03.2026 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம், பங்குனி 02

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## மின்சாரசபை மறுசீரமைப்பும் ஜே.வி.பி.யின் குட்டிக்கரணமும்

எதிரணியில் இருக்கும் போது உச்சத் தொனியில் உரத்துப் பேசுகின்ற பல விடயங்களை அதிகாரத்துக்கு வந்த பின்னர் நடைமுறைப்படுத்த முடிவதில்லை என்பதை தேசிய மக்கள் சக்தியின் குறிப்பாக ஜனதா விமுக்தி பெரமுனவின் (ஜே.வி.பி.) தலைவர்கள் கடந்த ஒன்றரை வருடங்களில் அனுபவ ரீதியாக படித்துக் கொள்கிறார்கள். நடைமுறைச் சாத்தியமான விடயங்களைக் கூட தங்களது அரசியல் அனுகூலத்துக்காக வேண்டுமென்றே அலட்சியம் செய்யவும் அவர்கள் பழகிக் கொண்டார்கள்.

வங்குரோத்து நிலையடைந்த பொருளாதாரத்தை மறுசீரமைப்பதற்காக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் செய்துகொண்ட உடன்பாட்டின் விளைவாக, சாதாரண மக்கள் பெரும் துன்பங்களை அனுபவிக்கிறார்கள் என்று குற்றஞ்சாட்டிய ஜே.வி.பி. யின் தலைவர்கள் அந்த உடன்பாட்டில் மாற்றங்களைச் செய்வதற்காக பேச்சுவார்த்தைகளை நடத்தப்போவதாக உறுதியளித்தார்கள். ஆனால், தற்போது விக்கிரமசிங்க அரசாங்கம் விட்டுச் சென்ற இடத்தில் இருந்து அந்த உடன்பாட்டை முன்னரை விடவும் உறுதியாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்னெடுக்கிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளின் பிரகாரம் பொருளாதாரக் கொள்கைகளை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கடைப்பிடித்துவருவதை நோக்கும்போது அவர்களுக்கென்று ஏதாவது பொருளாதாரக் கொள்கை சொந்தத்தில் இருந்ததா என்ற சந்தேகம் எழுகிறது.

பெருவாரியான அரச நிறுவனங்கள் நட்டத்தில் இயங்குகின்றன என்பது எல்லோருக்கும் தெரியும். அந்த நிறுவனங்களில் சிலவற்றைக் கலைக்க வேண்டும் என்பதும் மாற்றியமைத்து இலாபத்தில் இயங்க வைக்கக்கூடிய நிறுவனங்களை தனியார்மயமாக்குவது உட்பட மறுசீரமைப்புக்கு உட்படுத்த வேண்டும் என்பதும் சர்வதேச நாணய நிதியத்தின் முக்கியமான நிபந்தனைகளில் ஒன்றாகும்.

விக்கிரமசிங்க அரசாங்கம் அத்தகைய அரச நிறுவன மறுசீரமைப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தபோது இன்றைய ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க உட்பட ஜே.வி.பி. தலைவர்கள் தேசிய சொத்துக்களை தனியாருக்கு அல்லது வெளிநாடுக் கம்பனிகளுக்கு விற்பனை செய்வதற்கு முயற்சிக்கப்படுவதாக குற்றஞ்சாட்டி தொழிற் சங்கங்களை அன்றைய அரசாங்கத்துக்கு எதிராக அணிதிரட்டினார்கள்.

தற்போது அதிகாரத்தில் இருக்கும் அவர்கள் தாங்கள் முன்னர் முன்வைத்த குற்றச்சாட்டுக்களை எல்லாம் மறந்தவர்களாக அரச நிறுவனங்களை மறுசீரமைக்கும் நடவடிக்கைகளை முன்னெடுப்பதைக் காண்கிறோம்.

படுமோசமான நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களில் ஒன்று இலங்கை மின்சாரசபை. அமைச்சரவைக் குழுவொன்றின் யோசனைகளின் பிரகாரம் 2022 டிசம்பரில் மின்சார சபையை மறுசீரமைக்க அதை 15 கம்பனிகளாக்கும் திட்டத்தை விக்கிரமசிங்க அரசாங்கம் முன்வைத்தது.

மின்சாரசபையில் பணியாற்றும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் உரிமைகள் பறிக்கப்படுவதாகவும் தேசிய சொத்துக்கள் விலைபோவதாகவும் குரலெழுப்பிய ஜே.வி.பி. தொழிற்சங்கங்களுடன் சேர்ந்து அந்த திட்டத்தை முறியடித்தது. இன்று அதே ஜே.வி.பி. யின் அரசாங்கம் மின்சார சபையின் பணிகளை புதிதாக உருவாக்கப்படவிருக்கும் ஆறு கம்பனிகளிடம் கையளிப்பதற்கு திட்டத்தை முன்னெடுத்திருக்கிறது.

இது தொடர்பில் சக்தி வள அமைச்சர் குமார ஜெயக்கொடி அணைமையில் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை வெளியிட்டிருந்தார். அதற்கெதிராக மின்சார சபையில் உள்ள தொழிற் சங்கங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்கின்ற போதிலும், அவற்றின் பிரதிநிதிகளை அரசாங்கம் பேச்சுவார்த்தைக்கு அழைத்த போது அவர்ககள் படுமோசமான நட்டத்தில் சபை இயங்குகிறது என்பதைப் பற்றி கிஞ்சித்தும் கவலைப்படாமல் ஆயிரக்கணக்கில் சம்பள உயர்வைத்தான் கேட்கிறார்கள். தேசிய சொத்துக்கள் மீதான பக்தியின் இலட்சணம்...?

# இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவின் 'ஆறு விரல்' வீடியோவால் சர்ச்சை

டெல்அவிவ், மார்ச். 16

ஈரான் - இஸ்ரேல், அமெரிக்கா இடையிலான போர் 16ஆவது நாட்களை எட்டியுள்ள நிலையில், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் இருப்பிடம் மற்றும் உடல்நிலை குறித்து சமூக வலைத்தளங்களில் விவாதம் எழுந்துள்ளது.

இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு வெளியிட்ட சமீபத்திய வீடியோ ஒன்றில் அவருக்கு வலது கையில் ஆறு விரல்கள் இருப்பது போன்ற காட்சிகள் இடம்பெற்றுள்ளதால், அந்த வீடியோ செயற்கை நுண்ணறிவு மூலம் உருவாக்கப்பட்டதா என்ற சந்தேகம் சமூக வலைத்தளங்களில் கிளம்பியுள்ளது.

கடந்த 13ஆம் திகதி நெதன்யாகு தனது எக்ஸ் பக்கத்தில் அமெரிக்கா - இஸ்ரேல் படைகள் ஈரான் மீது நடத்தி வரும் போர் குறித்து பேசும் வீடியோ ஒன்றைப் பதிவிட்டிருந்தார். அந்த வீடி யோவை கவனித்த பயனர்கள், அதில் அவர் தன் கையை அசைக்கும் போது ஓர் இடத்தில் ஆறு விரல்கள் தெரிவதாக சுட்டிக் காட்டியுள்ளனர்.



நெதன்யாகு ஏற்கனவே கொல்லப்பட்டுவிட்டார் என்றும், தற்போது வெளியாகும் வீடியோக்கள் ஏஐ தொழில்நுட்பத்தால் உருவாக்கப்பட்ட போலி வீடியோக்கள் என்றும் பலரும் பதிவிட்டு வருகின்றனர்.

சமூக வலைத்தளங்களில் பரவும் இந்த வதந்திகளை எக்ஸ் தளத்தின் க்ரோக் ஏஐ மறுத்துள்ளது. நெதன்யாகு அந்த வீடியோவில் ஐந்து விரல்களைக் கொண்டுள்ளார் என்றும், ஒளிப்பதிவு செய்யப்பட்ட கோணம் மற்றும் கையின் அசைவு காரணமாக ஏற்பட்ட ஒரு மாயத்தோற்றமே அது என்றும் விளக்கம் அளித்துள்ளது.

எனினும், இந்த வதந்திகளுக்கு அமெரிக்கா அல்லது இஸ்ரேல் தரப்பில் இருந்து எந்தவித அதிகாரபூர்வ அறிக்கையும் வெளியாகவில்லை. (எ)

# ஈரானின் இஸ்பஹான் நகர் மீது தாக்குதல்: தொழிற்சாலை ஊழியர்கள் 15 பேர் பலி!

தெஹ்ரான், மார்ச். 16

ஈரானின் இஸ்பஹான் நகரில் நடத்தப்பட்ட தாக்குதலில் தொழிற்சாலை ஊழியர்கள் 15 பேர் உயிரிழந்தனர். மேலும் பலர் காயமடைந்தனர்.

குளிர்சாதனப் பெட்டிகள் மற்றும் வெப்பமூட்டிகளைத் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றின் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

போர் தொடங்கியதில் இருந்து இஸ்பஹான் நகரம் இவ்வாறான தாக்குதல் நடவடிக்கைகளின் முக்கிய மையமாக மாறியுள்ளது.

நாட்டின் மத்திய பகுதியில் அமைந்துள்ள மிக முக்கியமான நகரமான இஸ்பஹானில், இராணுவ மற்றும் சிவில் ஆகிய இரு துறைகளுக்கும் சொந்தமான தொழிற்சாலைகளும், ஈரானின் மிக முக்கியமான பல அணுசக்தி நிலையங்களும் அமைந்துள்ளன.

இஸ்பஹான் தவிர தெஹ்ரான், தப்ரீஸ், பண்டார் அப்பாஸ் மற்றும் கர்மான் மாகாணத்தின் சிர்ஜான் ஆகிய நகரங்கள் மீதும் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ)

# அமெரிக்க இராணுவ விமானங்களுக்கு அனுமதி மறுப்பு: சுவிற்சர்லாந்து அதிரடி

பேர்ன், மார்ச். 16


அமெரிக்க இராணுவத்தின் இரு உத்தியோகபூர்வ விமானங்கள் தமது வான்பரப்பிற்கு மேலாகப் பறப்பதற்கு விடுத்த கோரிக்கையை சுவிற்சர்லாந்து நிராகரித்துள்ளது என்று வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சுவிற்சர்லாந்து நாட்டின் நடுநிலைமை தொடர்பான சட்டங்களை மேற்கோள் காட்டி இந்த அனுமதி மறுப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இரண்டு விமானங்களுக்கு சுவிற்சர்லாந்து தனது வான்பரப்பைத் திறக்காத அதேவேளை, மேலும் மூன்று விமானங்களுக்கு வான்பரப்பைப் பயன்படுத்துவதற்கான அனுமதியை வழங்க அந்த நாட்டு அரசு தீர்மானித்துள்ளது.

இது குறித்து சுவிற்சர்லாந்து அரசு விடுத்துள்ள அறிக்கையில், பராமரிப்பு விமானங்கள் மற்றும் போக்குவரத்து விமானங்களுக்கு மாத்திரம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உறவினர் நண்பர்கள் எதிர்பார்ப்புடன் பேசு வார்கள். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்பு களை ஒப்படைப்பார்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**இடபம்**
கணவன்- மனைவிக்குள் மனம் விட்டு பேசு வீர்கள்.புது முடிவுகள் எடுப்பீர்கள். புதியவர்கள் நண்பர்களாவார்கள். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**மிதுனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் ஒரு விஷயத்தை நினைத்து அதிகளவில் குழப்பம் அடைவீர்கள். உறவினர்கள் நண்பர்கள் விஷயத்தில் அத்துமீறி தலையிட வேண்டாம்.

**கடகம்**
சகோதர வகையில் நன்மை உண்டு. விலை உயர்ந்த ஆபரணம் வாங்குவீர்கள். மனைவி வழியில் மதிக்கப்படுவீர்கள். வேற்றுமதத்தவர் உதவுவார். எதிர்பாராத சந்திப்பு நிகழும்.

**சிம்மம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுக மாவார்கள். நெருங்கியவர்களுக்காக மற்றவர்களின் உதவியை நாடுவீர்கள்.

**கன்னி**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். பிள்ளைகளின் தனித்திறமைகளை கண்டறிவீர்கள். சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். நட்பு வட்டம் விரியும்.

**துலாம்**
கடந்த கால இனிய அனுபவங்களை நினைவுக் கூர்ந்து மகிழ்வீர்கள். தாய்வழி உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். பணப்பற்றாக்குறையை சமாளிப்பீர்கள். புது வேலை அமையும்.

**விருட்சிகம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. உறவினர்கள் வீடு தேடி வருவார்கள்.

**தனுசு**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். சில வேலைகளை விட்டுக் கொடுத்து முடிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிப்பு கூடும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள்.

**மகரம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்ற போராட வேண்டியிருக்கும். பொறுமைத் தேவைப்படும் நாள்.

**கும்பம்**
அனாவசிய செலவுகளை குறைக்கப்பாருங்கள். திடீர் பயணங்கள் இருக்கும். குடும்பத்தில் சின்ன சின்ன வாக்குவாதங்கள் வந்து நீங்கும். சகோதர வகையில் அலைச்சல் உண்டு.

**மீனம்**
எதார்த்தமாக பேசிக் கவர்வீர்கள். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பழைய கடனில் ஒரு பகுதியை பைசல் செய்வீர்கள். பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள்.

# தமிழ்க்கட்சிகள் கடமை தவறிவிட்டன: தலைமையை வழங்க நாங்கள் தயார்

## தமிழர் விடுதலை கூட்டணி அறிவிப்பு

வவுனியா, மார்ச். 16

சுயநலம் மேலோங்கியுள்ள தமிழ்க் கட்சிகள் தங்களது கடமைகளில் இருந்து தவறி விட்டன. அந்தத் தலைமைத் துவ இடைவெளியைத் தமிழர் விடுதலைக் கூட்டணி நிச்சயம் நிரப்பும் என்று அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் தேசிய ஒருங்கிணைப்பாளரு மான எஸ். சுதாகரன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“புதிய நிர்வாகிகளின் கீழ் தமிழ் மக்களுக்கான முறையான தலைமையை வழங்கும் நோக்குடன் தமிழர் விடுதலைக் கூட்டணி தற்போது சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது. கடந்த காலங்களில் சில பின்னடைவுகளைச் சந்தித்திருந்த போதிலும், தற்போது இளைஞர்களின் பங்களிப்புடன் புதிய உத்வேகத்துடன் முன்னிலையான அரசியல் பாதையை நோக்கி நாங்கள் நகர்ந்து வருகின்றோம்.

தற்போது தமிழ் மக்கள் உரிய தலைமைத்துவம் இன்றி இக்கட்டான நிலையில் வாழ்கின்றனர். எந்தவொரு தமிழ்க் கட்சியும் மக்களின் விடுதலைக்கான சரியான பாதையைத் தெரிவு செய்யவில்லை. தொடர்ச்சியாகப் பிழையான பாதையிலேயே அக்கட்சிகள் பயணிக்கின்றன. கட்சிகளுக்குள் பொதுநலன் மறைந்து சுயநலம் குடிகொண்டுள்ளது.”- என்றார். (எ)

# வாள், ஐஸ் போதையுடன் சுன்னாகத்தில் மூவர் கைது

யாழ்ப்பாணம், மார்ச். 16

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கட்டுவன் முனியப்பர் கோவிலை அண்மித்த பகுதியில் வைத்து மூவர் சட்டவிரோத பொருட்களுடன் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது ஒருவரிடமிருந்து வாளும், மற்றைய இருவரிடமிருந்து ஐஸ் போதைப்பொருளும் மீட்கப்பட்டன. ஒருவரிடமிருந்து 2 கிராம் 340 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும் மற்றையவரிடமிருந்து 2 கிராம் 220 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும் மீட்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் கீழ் இயங்கும் பொலிஸ் குழுவினரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. (எ)

## பாரம்பரிய கூட்டுறவு உணவகம் திறப்பு



யாழ்ப்பாணம், மார்ச். 16

பருத்தித்துறை புலோலி பலநோக்கு கூட்டுறவு சங்கத்தில் கூட்டுறவு பாரம்பரிய உணவகம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ந. திருலிங்கநாதன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

கூட்டுறவு பாரம்பரிய உணவகத்தை நாடா வெட்டி பாராளுமன்ற உறுப்பினர் ஜெ. றஜீவன் திறந்து வைத்தார். (எ-08)

# மன்னாரில் மழைக்கு வாய்ப்பு

கொழும்பு, மார்ச். 16

மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல் மற்றும் ஊவா மாகா ணங்களிலும் காலி, மாத்தறை, மன்னார் மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களிலும் பிற்பகல் 02. 00 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

வடமேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங் களில் சில இடங்களில் 50 மில்லி மீற்றருக் கும் அதிக மான ஓரளவு பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படு கின்றது.

வடமேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட் டங்களிலும் சில இடங்களில் அதிகாலை வேளையில் பனி மூட்டமான நிலை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக வீசக் கூடிய பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக் கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவ டிக்கைகளை எடுத்துக் கொள் ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப் படுகின்றார்கள்.(எ)

# பொன் அணிகளின் போர் சமநிலையில் முடிவடைந்தது

யாழ்ப்பாணம், மார்ச். 16

பொன் அணிகளின் போர் என்று வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரிக்கும் இடையிலான 109 ஆவது பெருஞ்சமர் சமநிலையில் நிறைவடைந்தது.

இந்தத் துடுப்பாட்டப் போட்டி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

முதல் நாள் ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற புனித பத்திரிசியார் கல்லூரி களத்தடுப்பினை தெரிவு செய்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி துடுப்பெடுத்தாடியது.

யாழ்ப்பாணக் கல்லூரி முதல்நாள் முதல் இன்னிங்ஸில் அனைத்து விக்கெட்களையும் இழந்து176 ஓட்டங்களை பெற்ற நிலையில் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய புனித பத்திரிசியார் கல்லூரி விக்கெட் இழப்பின்றி 40 ஓட்டங்களை பெற்ற நிலையில் முதல் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தது.

இரண்டாம் நாள் ஆட்டத்தை தொடர்ந்த புனித பத்திரிசியார் கல்லூரி அனைத்து விக்கெட்களையும் இழந்து 225 ஓட்டங்களை பெற்றநிலையில் முதல் இன்னிங்ஸ் நிறைவுக்கு வந்தது.

இரண்டாம் இன்னிங்ஸினை ஆரம்பித்த வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி 3 விக்கெட்களை இழந்து 99 ஓட்டங்களை பெற்றநிலையில் இரண்டாம் நாள் ஆட்டத்தின் இரண்டாம் இன்னிங்ஸ் நிறைவுக்கு வந்தது.

மூன்றாம் நாள் ஆட்டத்தில் இரண்டாம் இன்னிங்ஸை நேற்று முன்தினம் தொடர்ந்த யாழ்ப்பாணக் கல்லூரி 9 விக்கெட்களை இழந்து 246 ஓட்டங்களை பெற்ற நிலையில் ஆட்டத்தை முடித்துக்கொண்டது.

இதனையடுத்து இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி 4 விக்கெட்களை இழந்து 106 ஓட்டங்களை பெற்று சமநிலையில் முடிவடைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கு மக்கள் கோரிய அதிகாரத்தை வழங்குவது கடமை

## முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய

கொழும்பு, மார்ச். 16

மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படாமல் கடந்த 9 ஆண்டுகளாக இந்த நாட்டு மக்களுக்குக் கிடைக்க வேண்டிய அந்த அடிப்படை உரிமை மறுக்கப்பட்டுள்ளது. இது அநீ தியான செயலாகும். வடக்கு - கிழக்கு மக்கள் கோரிய ஆட்சி அதிகாரத்தை வழங்குவதை நாம் ஒரு கடமையாகக் கருத வேண்டும் என்று முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்தார்.


இலங்கை மன்றக்கல்லூரியில் மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் ஏற்பாடு செய்திருந்த விசேட கலந்துரையாடலிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், "மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவது மிகவும் முக்கியமான ஒரு விடயமாகும். கடந்த 9 ஆண்டுகளாக இந்த நாட்டு மக்களுக்குக் கிடைக்க வேண்டிய அந்த அடிப்படை உரிமையை நாம் வழங்கவில்லை. இது மிகவும் அநீதியான செயலாகும்.

கடந்த காலங்களில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் தமக்கான ஆட்சி அதிகாரத்தை கோரி போராடினர். அதற்காகப் பல்வேறு போராட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன. எனவே, அந்த உரிமையை அவர்களுக்கு வழங்குவதை நாம் ஒரு கடமையாகக் கருத வேண்டும்.

மாகாண சபைகள் இயங்காமல் அரச இயந்திரம் சரியாகச் செயல்பட முடியாது. அரச நிர்வாகக் கட்டமைப்பு முறையாக இயங்காத காரணத்தினால் நாட்டின் அபிவிருத்திப் பணிகளுக்குப் பெரும் தடை ஏற்பட்டுள்ளதை நாம் காண்கிறோம். எனவே, இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மக்களின் இந்த உரிமையை உடனடியாக வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்."- என்றார். (எ)

## முன்னாள் எம்.பி. திலங்க சுமதிபாலவின் "சமநிலையில் தீவு" புத்தகம் வெளியீடு



கொழும்பு, மார்ச். 16

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபாலவினால் தொகுக்கப்பட்ட சமநிலையில் தீவு எனும் புத்தக வெளியீட்டு நிகழ்வு கொழும்பில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பிரதமர் தினேஷ் குணவர்த்தன, முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய, அமைச்சர் பிமல் ரத்நாயக்க, பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் கலந்து கொண்டனர். (எ)

## முதலீட்டு சபை பணிப்பாளராக ரேணுகா வீரக்கோன் நியமனம்

கொழும்பு, மார்ச். 16

இலங்கையின் முதன்மை முதலீட்டு ஊக்குவிப்பு கட்டமைப்பான முதலீட்டுச் சபையின் பணிப்பாளர் நாயகமாக ரேணுகா வீரக்கோன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனத்துக்கு முன்னதாக, ரேணுகா வீரக்கோன் சுமார் நான்கு ஆண்டுகளாக பதில் பணிப்பாளர் நாயகமாக கடமையாற்றி வந்தார். இவ்வாறானதொரு பின்னணியில் அவரது இந்த நிரந்தர நியமனமானது முதலீட்டுத் துறையில் அவருக்குள்ள பரந்த அனுபவம் மற்றும் நிறுவன ரீதியான அறிவை அரசாங்கம் அங்கீகரித்துள்ளதை வெளிப்படுத்துகிறது.

நாட்டின் பொருளாதார மீட்சியை ஊக்குவிக்கவும், முதலீட்டாளர்களின் நம்பிக்கையை வலுப்படுத்தவும் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முதலீடுகள் அவசியமாக உள்ள மிகமுக்கிய காலகட்டத்தில் இந்த நியமனம் இடம்பெற்றுள்ளது. (எ)

## இ. போ. ச. சாலைகளின் ஊடாக தனியார் பஸ்களுக்கு எரிபொருள்

கொழும்பு, மார்ச். 16

தனியார் பயணிகள் போக்குவரத்து பேருந்துகளுக்கான எரிபொருள், இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான சாலைகள் ஊடாக விநியோகிக்கப்படும் என்று வலுசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

உற்பத்தி நடவடிக்கைகள் மற்றும் அத்தியாவசிய சேவைகளைப் பேணுவதற்குத் தேவையான வாகனங்களுக்கு, உரிய நிறுவனங்களுடன் இணைந்து விசேட வேலைத்திட்டத்தின் கீழ் எரிபொருள் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (எ)

# வீதி விபத்துக்களில் இருவர் உயிரிழப்பு!

கொழும்பு, மார்ச்.16

நாட்டின் இரு வேறு பகுதிகளில் இடம்பெற்ற வீதி விபத்துக்களில் சிக்கி இருவர் உயிரிழந்தனர்.

பிலியந்தலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புதிய பேருந்து நிலைய வீதியில், வீதியைக் கடக்க முயன்ற பாதசாரி ஒருவர் லொறியுடன் மோதி விபத்துக்குள்ளானார்.

இந்த விபத்தில் படுகாயமடைந்த பாதசாரி உயிரிழந்தார். உயிரிழந்தவர் மடபாத பகுதியைச் சேர்ந்த 71 வயதுடையவர் என அடையாளம் காணப்பட் டார்.

விபத்து தொடர்பில் லொறி சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை தொம்பே - பூகொட வீதியின் கிரிதர பகுதியில், பூகொட நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியைக் கடக்க முயன்ற பெண் பாதசாரி மீது மோதி விபத்துக்குள்ளானது.

இதில் படுகாயமடைந்த பெண் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் கப்புகொட பகுதியைச் சேர்ந்த 47 வயதுடையவர் ஆவார். இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு பெண்களும் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# கல்கிஸ்ஸையில் நேற்று பஸ் - கார் மோதி விபத்து

கொழும்பு, மார்ச். 16

கல்கிஸ்ஸை சந்தியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இடம்பெற்ற கோர விபத்தில் கார் ஒன்று பலத்த சேதமடைந்தது. அதன் பாதுகாப்பு பைகள் செயல்பட்டமையால் பயணிகள் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர்.

நேற்று அதிகாலை 01. 15 மணியளவில் கொழும்பில் இருந்து காலி நோக்கிப் பயணித்த பஸ் ஒன்றும் கார் ஒன்றும் மோதி இந்த விபத்து ஏற்பட்டது. குறித்த பஸ்ஸில் புனித யாத்திரை சென்று விட்டு மீண்டும் திரும்பிக்கொண்டிருந்த குழுவினர் இருந்துள்ளனர்.

இந்த விபத்தினால் கார் மிக மோசமாகச் சேதமடைந்துள்ளது. இருப்பினும், விபத்து ஏற்பட்ட தருணத்தில் காரின் பாதுகாப்பு பைகள் சரியான முறையில் செயல்பட்டதன் காரணமாக, காரில் பயணித்த எவருக்கும் எந்தவித காயங்களும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றுலா அபிவிருத்தி தொடர்பில் ஆளுநர் செயலகத்தில் ஆராய்வு

திருகோணமலை, மார்ச். 16

கிழக்கில் சுற்றுலா அபிவிருத்தி சார்ந்த வேலைத் திட்டங்கள் குறித்தும் அதற்கான முதலீடுகள் மற்றும் காணி ஒதுக்கீடு தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண விசேட சுற்றுலாத்துறை அபிவிருத்தி தொடர்பான விசேட கூட்டம் திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

சுற்றுலாத்துறை பிரதி அமைச்சர் ருவான் ரணசிங்க, கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகர, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர, பாராளுமன்ற உறுப்பினர் ரோஷன் அக்மீமன, துறைசார் திணைக்கள பணிப்பாளர்கள், செயலாளர்கள் ஆகியோர் இதில் பங்கேற்றனர்.

குறித்த கூட்டத்தின் போது கிழக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படவுள்ள சுற்றுலாத் துறை அபிவிருத்தி தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த சுற்றுலாத்துறை பிரதி அமைச்சர், மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக சுற்றுலாத்துறை பெரிதும் பாதிப்புக்குள்ளாகி உள்ளது.

குறுகிய காலத்தில் ஏற்பட்ட இந்த சூழ்நிலையில் இருந்து மீண்டு எழுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருகிறது. கூடிய விரைவில் இந்த நிலைமை சீர் செய்யப்பட்டு சுமுகமான நிலைக்கு நாடு திரும்பும்.

விசேடமாக திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களில் முன்னெடுக்கப்படவுள்ள சுற்றுலா அபிவிருத்தி சார்ந்த வேலைத் திட்டங்கள் குறித்தும் அதற்கான முதலீடுகள் மற்றும் காணி ஒதுக்கீடு தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக காணிகள் ஒதுக்கீடு தொடர்பான வேறு அரச திணைக்களங்களின் அனுமதிகள் குறித்தும் விசேட கவனம் செலுத்தப்பட்டன என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ)

# போதைப்பொருட்களுடன் 8 பேர் பொலிஸாரால் கைது

மஸ்கெலியா, மார்ச். 16

போதைப்பொருட்களுடன் சிவனொளிபாதமலைக்கு யாத்திரை சென்ற 08 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மவுசாக்கலை சோதனைச் சாவடியில் முன்னெடுக்கப்பட்ட சோதனையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

சிவனொளிபாதமலை தரிசனத்துக்காக வெளி மாவட்டங்களிலிருந்து பெருமளவிலான பக்தர்கள் வாகனங்கள் ஊடாக வருகை தந்த வண்ணம் உள்ளனர். இதன்காரணமாக அந்தப் பகுதியில் சோதனை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. (எ)

# அமுத விழா இலச்சினை வெளியீடு




அக்கரைப்பற்று, மார்ச்.16

அம்பாறை- அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் ஏற்பாடு செய்யப்பட்ட இவ்வாண்டுக்கான இப்தார் நிகழ்வும், அமுத விழா இலச்சினை வெளியீட்டு வைபவமும் நேற்று முன்தினம் மாலை கல்லூரி வளாகத்தில் அதிபர் ஏ.எல்.நசீபா தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அக்கரைப்பற்று மாநகர சபை முதல்வர் அதாவுல்லா பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

இன நல்லுறவைக் கட்டியெழுப்பும் வகையில் நடைபெற்ற இந்த நிகழ்வின்போது மூவினங்களையும் சேர்ந்த பாடசாலை ஆளணியினர், மார்க்க அறிஞர்கள், உலமாக்கள், கல்வித்துறை உயரதிகாரிகள், ஊடகவியலாளர்கள், புத்திஜீவிகள், பாடசாலைச் சமூகத்தினர் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)

# துப்பாக்கி சூட்டில் காயமடைந்த காட்டு யானைக்கு சிகிச்சை




கல்முனை, மார்ச். 16

அம்பாறையின் பணமை பகுதியில் உள்ள கடற்படையினர் அப்பகுதியில் சுற்றித்திரிந்த துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த காட்டு யானைக்கு தேவையான சிகிச்சை அளிக்க வனவிலங்கு பாதுகாப்பு பிரிவுக்கு உதவி செய்துள்ளனர்.

அம்பாறை வனவிலங்கு பாதுகாப்புத் துறை அலுவலகத்துக்கு வழங்கப்பட்ட தகவலுக்கமைய வனவிலங்கு சுகாதாரப் பிரிவின் சிரேஷ்ட கால்நடை மருத்துவர் நிஹால் புஷ்பகுமார உள்ளிட்ட வனவிலங்கு அதிகாரிகள் யானைக்கு மயக்க மருந்து கொடுத்து சிகிச்சையளித்தனர்.

காட்டு யானைக்கு சிகிச்சை அளிக்க வந்த குழுவினருக்கு கடற்படையினர் தேவையான உதவிகளை வழங்கியிருந்தனர். (எ-01)

# காத்தான்குடி கடற்கரையில் மர்மப்பொருள்



மட்டக்களப்பு, மார்ச். 16

மட்டக்களப்பு- காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காத்தான்குடி கடற்கரையில் பாரியளவிலான மர்மப் பொருள் ஒன்று கரையொதுங்கியுள்ளது.

சுமார் 25 அடி நீளமும், 4 அடி உயரமும் கொண்ட இந்த மர்மப்பொருள் ரெஜிபோர்மினால் காணப்படுகிறது.

கப்பல் தரைதட்டும்போது அதன் பாதுகாப்புக்கு பயன்படும் தடுப்பு ஆணையாக இது இருக்கலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த மர்மப்பொருள் தொடர்பான விசாரணைகளை கடற்படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இதனை பார்வையிட பொது மக்கள் கூடி வருகின்றனர். (எ)

# "மருத்துவமனை குறைபாடுகளை நிவர்த்திக்க உடனடி நடவடிக்கை"


கல்முனை, மார்ச். 16

அம்பாறை- மல்வத்தை பிரதேச மருத்துவமனையின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி, பொதுமக்களுக்கான சுகாதார சேவைகளை வினைத்திறனாக்குவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் என்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி சகீலா இஸ்ஸடீன் தெரிவித்தார்.

மல்வத்தை பிரதேச மருத்துவமனையின் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் மருத்துவமனையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலின் போது, மருத்துவமனையில் தற்போது நிலவும் அத்தியாவசியத் தேவைகள், ஆளணிப் பற்றாக்குறை மற்றும் நோயாளர் பராமரிப்பு சேவையில் உள்ள சவால்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டன. இதனையடுத்து, மருத்துவமனையின் பல்வேறு பிரிவுகளுக்கும் நேரில் சென்ற பணிப்பாளர், அங்குள்ள நிலைமைகளை அவதானித்ததுடன், மருத்துவமனை நிர்வாகத்தினால் முன்வைக்கப்பட்ட மிக முக்கியமான மற்றும் அவசரத் தேவைகளை உடனடியாக நிவர்த்தி செய்து தருவதாக உறுதியளித்தார். (எ-01)

# கல்முனையில் மகளிர் தின விழா




கல்முனை, மார்ச். 16

கல்முனை ஆதார மருத்துவமனையில் சர்வதேச மகளிர் தினம் பணிப்பாளர் கு. சுகுணன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் விசேட விருந்தினர்களாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சகீலா இஸ்ஸதீன், கல்முனை தெற்கு பிரதேச செயலகத்தின் மகளிர் அபிவிருத்தி அதிகாரி திருமதி ஜெனிதா மோகன் ஆகியோர் கலந்து கொண்டனர். (எ-09)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்களை...

செயற்பட வேண்டும் என்றும் அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள போர்ச் சூழலால் அத்தியாவசிய சேவைகளை முறையாகப் பேணுவதில் எழுந்துள்ள சிக்கல்கள் குறித்து, ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவுக்கும் அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் நிறுவனத் தலைவர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்தக் கலந்துரையாடலின் போது, சுகாதாரம், கல்வி, கைத்தொழில், விவசாயம் மற்றும் கடற்றொழில் போன்ற துறைகள் குறித்துக் கவனம் செலுத்தப்பட்டதுடன்,

போர்ச் சூழலால் நிலக்கரி, எரிவாயு மற்றும் எண்ணெய் உள்ளிட்ட வலுசக்தி விநியோகக் கட்டமைப்புக்களுக்கு ஏற்பட்டுள்ள தடைகள் குறித்தும், அந்தத் தடைகளை எதிர்கொண்டு தொடர்ச்சியான எரிபொருள் விநியோகத்தை உறுதிப்படுத்துவதற்காக ஒவ்வொரு துறையினராலும் தற்போது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் முன்மொழியப்பட்டுள்ள மாற்றுவழிகள் குறித்தும் ஆராயப்பட்டது.

இதன்போது, ஒவ்வொரு துறைகளினதும் தற்போதைய எரிபொருள் தேவைகள் குறித்து அமைச்சுக்களின் செயலாளர்களால் ஜனாதிபதிக்கு விளக்கமளிக்கப்பட்டது.

முன்வைக்கப்பட்ட விடயங்களை ஆராய்ந்த ஜனாதிபதி, சுகாதாரத்துறை போன்ற அதிமுக்குயமான துறைகளுக்குத் தேவையான அத்தியாவசிய எரிபொருள் கையிருப்புகளைப் பிரதேச ரீதியாகப் பராமரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி ஆராயுமாறு கேட்டுக்கொண்டார்.

அதேபோன்று, வீட்டிலிருந்து பணியாற்றும் முறைமை குறித்து மேலும் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு அந்தந்தத் துறை சார்ந்த அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய நிலைமைகள் குறித்து முன்கூட்டியே எதிர்வுகூற முடியாது என்பதால், எந்தவொரு சூழ்நிலையையும் எதிர்கொள்ளத் தயாராக இருக்க வேண்டியதன் அவசியத்தையும், அதற்காக தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள டிஜிற்றல் குறியீட்டு முறையை மேலும் முறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

தற்போதுள்ள டிஜிற்றல் குறியீட்டு முறையில் காணப்படும் குறைபாடுகளை மிக விரைவில் திருத்தியமைத்து அதனைப் புதுப்பிக்குமாறும் ஜனாதிபதி சம்பந்தப்பட்ட அஅதிகாரிகளைக் கேட்டுக்கொண்டார்.

மேலும், உருவாகும் புதிய நிலைமைகள் குறித்து தொடர்ச்சியான கண்காணிப்புடனும் அவதானத்துடனும் இருக்க வேண்டும் என்றும், ஒவ்வொரு துறையும் தனித்தனியாக முடிவெடுப்பதற்குப் பதிலாக, ஒட்டுமொத்தமாகச் சிந்தித்து சவால்களுக்கான மாற்று வழிகளைக் கண்டறிந்து செயற்படுத்த வேண்டும் என்றும் இதற்காகப் பரஸ்பர புரிந்துணர்வுடன் விரைவாகச் செயற்படுமாறும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

இந்தக் கலந்துரையாடலில், வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி பிரதி அமைச்சர் சதுரங்க அபேசிங்க, ஜனாதிபதியின் செயலாளர் நந்திக்க சனத் குமாநாயக்க, ஜனாதிபதியின் டிஜிட்டல் பொருளாதார ஆலோசகர் ஹான்ஸ் விஜேசூரிய, ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானி பிரபாத் சந்திரகீர்த்தி, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரொஷான் கமகே ஆகியோருடன் சுகாதாரம், கல்வி, கைத்தொழில் மற்றும் கடற்றொழில் அமைச்சுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் நிறுவனத் தலைவர்களும் கலந்து கொண்டனர். (ஒ)

## ஹோர்முஸ் நீரிணை...

அழைப்பை விடுத்துள்ளார்.

இது குறித்து தனது "ட்ரூத் சோஷியல்" தளத்தில் பதிவிட்டுள்ள அவர், "ஈரான் இந்த வழியை மூட முயன்ற போதிலும், ஏதோ ஒரு வழியில் ஹோர்முஸ் நீரிணையை விரைவில் பாதுகாப்பானதாகவும், சுதந்திரமானதாகவும் திறப்போம்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

உலகளாவிய எரிசக்தி விநியோகத்தில் ஹோர்முஸ் நீரிணை மிக முக்கிய பங்கு வகிக்கிறது.

உலகின் மொத்த மசகு எண்ணெய் விநியோகத்தில் மூன்றில் ஒரு பங்கு இந்தப் பாதை ஊடாகவே நடைபெறுகிறது. இந்தப் பாதை முடக்கப்படுவது உலகளாவிய எரிபொருள் விலையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.

ஈரானின் புதிய உயர்மட்டத் தலைவர்,இந்த நீரிணையைத் தொடர்ந்து முடக்கி வைக்கப்போவதாக சபதம் செய்துள்ளார்.

ஈரானின் "எதிரிகளுக்கு" மட்டுமே இந்தப் பாதை மூடப்பட்டுள்ளதாக அந்த நாட்டு வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராகச்சி தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில், போர் ஆரம்பித்தது முதல் இதுவரை வளைகுடா மற்றும் ஹோர்முஸ் நீரிணைப் பகுதிகளில் பயணித்த 16 கப்பல்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளதாக பிரித்தானிய கடல்சார் வர்த்தக நடவடிக்கைகள் அமைப்பு உறுதிப்படுத்தியுள்ளது. (அ)

## மத்திய கிழக்கில்...

ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ள திருத்தந்தை 14ஆம் லியோ, போரில் ஈடுபட்டுள்ள தரப்புக்கள் உடனடியாகப் போரை நிறுத்த வேண்டும் என்று பகிரங்க அழைப்பு விடுத்துள்ளார்.

சென். பீற்றர்ஸ் சதுக்கத்தில் நேற்று இடம்பெற்ற ஞாயிற்றுக் கிழமை ஏஞ்சலஸ் பிரார்த்தனையில் உரையாற்றிய போதே திருத்தந்தை 14ஆம் லியோ மத்திய கிழக்கில் போர் நிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்தார்.

"இரண்டு வாரங்களாக, மத்திய கிழக்கு மக்கள் போரின் கொடூரமான வன்முறையை அனுபவித்து வருகின்றனர்," என்று கூறிய போப், மோதலுக்குப் பொறுப்பானவர்கள் உடனடியாக சண்டையை நிறுத்துமாறு வலியுறுத்தினார்.

மத்திய கிழக்கில் உள்ள கிறிஸ்தவர்கள் சார்பாக, சண்டையை நிறுத்துங்கள் என்று இந்த மோதலுக்கு காரணமானவர்களிடம் நான் வேண்டுகோள் விடுக்கிறேன் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

மேலும், கொடிய போரில் கொல்லப்பட்டவர்களின் உறவுகள் மற்றும் உடமைகளை இழந்தவர்களோடு அதன் உணர்வுபூர்வமாகக் கலந்திருப்தாகத் தெரிவித்த திருத்தந்தை 14ஆம் லியோ, பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மை மற்றும் நீடித்த அமைதியைக் கருத்தில் கொண்டு மோதலில் ஈடுபட்டுள்ள சகல தரப்பினரையும் பேச்சுவார்த்தை மூலம் அமைதியான தீர்வுகளைத் தேட வேண்டும் என்று வலியுறுத்தினார். (ஒ)

## மாகாண சபை...

வெளியிடப்படவுள்ளன. அத்துடன், குறித்த குழுவின் பரிந்துரைகளை ஜூன் மாதத்துக்கு முன்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு அரசு அறிவுறுத்தியுள்ளது.

புலம்பெயர் இலங்கையர்களுக்கான வாக்குரிமை குறித்து கொழும்பைத் தளமாகக் கொண்டு இயங்கும் பன்னாட்டு இராஜதந்திர மையங்களுடன் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் ஏற்கனவே கலந்துரையாடல்களை முன்னெடுத்திருந்தார். இதன்போது எட்டப்பட்ட தீர்மானங்கள் மற்றும் பரிந்துரைகளின் அடிப்படையிலேயே இந்த வாய்ப்பு வழங்கப்படவுள்ளது.

இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை இவ்வருடத்துடன் நிறைவடைகின்றது. இந்தச் சலுகையை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு மனித உரிமைகள், நல்லாட்சி உள்ளிட்ட 27 நிபந்தனைகளை இலங்கை பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது. இதில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவது மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவது ஆகியன பிரதான நிபந்தனைகளாக உள்ளன.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் மீளாய்வுக் கூட்டத் தொடரில் இலங்கை மீது தேவையற்ற அழுத்தங்கள் ஏற்படுவதைத் தவிர்க்கும் நோக்கில், அதற்கு முன்னதாகவே தேர்தலுக்கான திகதியை அறிவிக்க அரசு தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## 9 ஆண்டுகளாக...

மக்கள் தமக்கான ஆட்சி அதிகாரத்தைக் கோரி நீண்ட காலமாகப் போராடி வருகின்றனர். அந்த உரிமையை அவர்களுக்கு வழங்குவதை நாம் ஒரு கடமையாகக் கருத வேண்டும்.

மாகாண சபைகள் இயங்காமல் அரச இயந்திரம் சரியாகச் செயற்பட முடியாது. அரச நிர்வாகக் கட்டமைப்பு முறையாக இயங்காத காரணத்தால் நாட்டின் அபிவிருத்திப் பணிகளுக்குப் பெரும் தடை ஏற்பட்டுள்ளதை நாம் காண்கின்றோம். எனவே, மக்களின் இந்த உரிமையை உடனடியாக வழங்க வேண்டும்.

இந்த விடயம் தொடர்பாக பாராளுமன்றச் சபை முதல்வர் மற்றும் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட பல அரசியல் கட்சித் தலைவர்களைச் சந்தித்துப் பேசும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவர்கள் அனைவரும் தேர்தலை உடனடியாக நடத்தவேண்டும் என்ற கருத்துக்கு இணக்கம் தெரிவித்துள்ளனர்.

எனவே, அனைத்துத் தேசிய மற்றும் பிராந்திய அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து இந்தச் செயற்பாட்டை விரைவாக முன்னெடுக்கவேண்டும்.

அத்துடன், கடந்த தேர்தல்களின் போது வழங்கப்பட்ட வாக்குறுதியின்படி, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பது குறித்தும் நாம் அவதானம் செலுத்த வேண்டும். இதனை நிச்சயமாக ஒழிப்பதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உறுதியளித்துள்ளார். தனிப்பட்ட ரீதியில் அவரைச் சந்தித்த போதும் அவர் இதனை உறுதிப்படுத்தினார். இதன் மூலம் நாட்டில் ஒரு புதிய அரசியல் கலாசாரம் உருவாகும் என நாம் எதிர்பார்க்கின்றோம். - என்றார். (அ)

## எரிபொருள் தட்டுப்பாட்டை...

இலங்கை முன்னெடுத்துள்ளது.

இதன்போது, வழமையான கேள்விப்பத்திர நடைமுறைகளைத் தவிர்த்து, அரசாங்கங்களுக்கு இடையிலான உடன்படிக்கையின் கீழ் இந்த எரிபொருள் கொள்வனவை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் இலங்கையின் கோரிக்கைகளுக்கு இந்தியாவும் ரஷ்யாவும் சாதமான பதிலை வழங்கியுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை ரஷ்யாவுடனான கொடுக்கல் வாங்கல்களை எந்த நாணய அலகில் மேற்கொள்வது என்பது குறித்து தற்போது ஆராயப்பட்டு வருகிறது.

யுக்ரைன் போருக்குப் பின்னர் ரஷ்யாவின் டொலர் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளதால், தேசிய நாணய அலகுகளில் வர்த்தகத்தை மேற்கொள்ள ரஷ்யா முன்னுரிமை அளித்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## வைத்தியசாலை...

தடையின்றி முன்னெடுத்துச் செல்வதற்கு எவ்வகையிலும் போதுமானதாக இல்லை என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, தமது வீடுகளில் இருந்து நீண்ட தூரத்தில் உள்ள வைத்தியசாலைகளில் பணியாற்றும் விசேட வைத்திய நிபுணர்கள், தரநிலை வைத்தியர்கள் மற்றும் நிர்வாக வைத்தியர்கள் இதனால் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

தற்போதைய ஒதுக்கீட்டு அளவைக் கொண்டு கடமைக்குச் செல்வது கூட சாத்தியமற்ற ஒன்றாக மாறியுள்ளதாகச் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இது ஒட்டுமொத்த சுகாதார சேவையின் வினைத்திறனைப் பாதித்து, நோயாளர்களுக்கான சிகிச்சைகளிலும் சிக்கல்களை ஏற்படுத்தும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் அத்தியாவசிய சேவையாளர்கள் எதிர்கொள்ளும் இந்த நடைமுறைச் சிக்கல்களை அரசாங்கம் உடனடியாகக் கண்டறிய வேண்டும் என்றும், அவர்களுக்குத் தேவையான கூடுதல் எரிபொருள் ஒதுக்கீட்டை வழங்குவதற்கு விரைவான தீர்வுகளை முன்வைக்க வேண்டும் என்றும் அச்சங்கம் வலியுறுத்தியுள்ளது. (அ)

## எரிபொருள் நிலைய...

நெரிசலும் நீண்ட வரிசைகளும் உருவாகியுள்ளதாகக் குறிப்பிட்ட அவர், நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவர அனைத்து நிலையங்களுக்கும் பொலிஸ் பாதுகாப்பை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

இது குறித்து மேலும் கருத்துத் தெரிவித்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் சேனாதீர, இதற்காகப் பொதுமக்கள் பதற்றமடையத் தேவையில்லை. கியூ.ஆர். குறியீடு அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர், அந்தந்த வாகன வகைகளுக்கு ஏற்பத் தேவையான எரிபொருள் அளவு முறையாக வழங்கப்படும். மக்கள் காட்டும் தேவையற்ற அவசரமே எரிபொருள் நிலையங்களில் இவ்வளவு கூட்ட நெரிசலுக்குக் காரணமாகியுள்ளது. இதனால், அந்தந்தப் பகுதிகளில் பாதுகாப்பை உறுதிப்படுத்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் மற்றும் தலைமையகப் பொலிஸ் பரிசோதகர்களை நாம் ஈடுபடுத்தியுள்ளோம்.

பொதுமக்கள் அமைதி காத்தால் இந்தப் பிரச்சினை ஏற்படாது. 10 லீற்றர் தேவைப்படும் இடத்தில் 50 லீற்றர் அடிக்க முற்படுகிறார்கள். இவை அனைத்தும் அவசரப்படுவதால் ஏற்படும் விளைவுகள். யுத்த நிலைமை காரணமாகக் கொண்டு வரப்பட்ட ஒரு முகாமைத்துவமே இது. உங்கள் வாகனத்திற்குத் தேவையான எரிபொருளை எந்தவொரு நிலையத்திலிருந்தும் பெற்றுக்கொள்ள முடியும். எனவே, வீதி நெரிசலைக் குறைக்கவும் ஒழுங்கைப் பேணவும் போக்குவரத்துப் பொலிஸாரும் ஏனைய அதிகாரிகளும் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்" எனத் தெரிவித்தார். (அ)

## ஏப்ரல் 2 முதல்...

சமர்ப்பிக்கப்பட்டிருந்த மேன்முறையீடுகள் மீதான தீர்மானங்கள் தற்போது அனைத்து அதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளன. இந்தத் தீர்மானங்களை அரச சேவை ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் பார்வையிட முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 2026 வருடாந்த இடமாற்ற உத்தரவுகளைப் பெற்றுள்ள அனைத்து அதிகாரிகளும் குறித்த திகதியில் தமது புதிய சேவை நிலையங்களில் கடமைகளைப் பொறுப்பேற்க வேண்டும் என அரச சேவை ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

மேலும், அரச சேவை ஆணைக்குழுவினால் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட இடமாற்றங்கள் தொடர்பாக இனிவரும் காலங்களில் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் அல்லது பரிந்துரைகள் மீண்டும் பரிசீலிக்கப்பட மாட்டாது என்றும் அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## அடுத்தமாத இறுதி...

ஊடகங்களுக்கு விளக்கமளித்த போதே இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அந்த ஊடக சந்திப்பில் அவர் மேலும் கூறுகையில், மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள போர்ப் பதற்றத்தினால் இலங்கையின் எரிபொருள் விநியோகத்தில் குறிப்பிடத்தக்கதான தாக்கமேதும் ஏற்படவில்லை. ஆனாலும் வழக்கத்துக்கு மாறாக அளவுக்கதிகமாக எரிபொருளைக் கொள்வனவு செய்தவர்களாலும், பதுக்கல் வியாபாரத்தில் ஈடுபட்டவர்களாலும் கடந்த வாரங்களில் எரிபொருள் நுகர்வு 21 வீதத்தினால் அதிகரித்தது.

இத்தகையதொரு நெருக்கடி நிலைமையைத் தவிர்ப்பதற்காகவே அரசாங்கம் கியூ. ஆர் முறைமையை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. சில மொழில்நுட்பச் சிக்கல்கள் காரணமாக வியோகத்தில் சில தடங்கல்கள் காணப்பட்டன.

அனைத்து வகையான சிக்கல்களும் தீர்க்கப்பட்டுள்ளன. இனிவரும் நாள்களில் கியூ. ஆர் முறைமை மூலமே எரிபொருள் விநியோகம் செய்யப்பட வேண்டும் என்று நாட்டிலுள்ள சகல எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் கண்டிப்பான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மீறும் எரிபொருள் நிரப்பு நிலையங்களின் உரிமம் சமரசத்துக்கு இடமின்றி இரத்துச் செய்யப்படும் என்று கூறினார்.

இதேவேளை -

பொதுப் போக்குவரத்தில் ஈடுபடும் பேருந்துகளுக்கு எரிபொருள் வளங்குவதற்கான நிலையான தீர்வு விரைவில் அறிவிக்கப்படும் என்றும், அதுவரை இலங்கைப் போக்குவரத்து சபை டிப்போக்களில் எரிபொருளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (ஒ)

## கியூ.ஆர்...

நோக்குடன் நேற்றுக் காலை முதல் கியூ. ஆர் முறைமை மூலம் மட்டுமே எரிபொருள் விநியோகம் செய்யப்படும் என அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் கியூ. ஆர் முறைமையை நடைமுறைப்படுத்துவதில் சில தொழில்நுட்பச் சிக்கல்கள் நேற்று நண்பகல் வரை காணப்பட்டன. இதனால் நண்பகல் வரை எரிபொருள் விநியோகத்தில் நெருக்கடி நிலை காணப்பட்டது. அதனால் வரிசையில் நின்று எரிபொருளை நிரப்புவதில் பொதுமக்கள் முண்டியடித்தனர்.

நண்பகலுக்குப் பின்னர் தொழில்நுட்பச் சிக்கல்கள் ஓரளவுக்குத் தீர்த்து வைக்கப்பட்டதைத் தொடர்ந்து கியூ. ஆர் முறைமை அடிப்படையில் எரிபொருள் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டது. அதன் பின்னர் நெருக்கடி குறைந்து, இலகுவாக எரிபொருள் விநியோகம் இடம்பெற்றதை அவதானிக்க முடிந்தது. (ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# அரச திணைக்கள கட்டுப்பாட்டில் உள்ள மக்களின் காணிகள் விரைவில் விடுவிப்பு

## யாழில் அமைச்சர் விமல் ரத்நாயக்க



யாழ்ப்பாணம், மார்ச் 16

வனவளத் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ள மக்களின் காணிகளை விடுவிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், நிர்வாகச் சிக்கல்கள் விரைவில் தீர்க்கப்பட்டு மக்கள் தங்கள் சொந்தப் பகுதிகளில் மீண்டும் குடியேறுவதற்கான சூழல் உருவாக்கப்படும் என்றும் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் நகர மேம்பாட்டு அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

“வளமான நாடு - அழகான வாழ்க்கை” என்ற தொனிப்பொருளின் கீழ், யாழ்ப்பாண மாவட்டத்தில் 117.4 மில்லியன் ரூபா செலவில் காரைநகர் சுற்றுவட்ட வீதியின் புனரமைப்புப் பணிகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

உலகளாவிய போர்ப் பதற்றத்தை முன்னிட்டு சித்திரைப் புத்தாண்டுக்குப் பின்னர் எரிபொருள் நெருக்கடி ஏற்படும் வாய்ப்பைக் கருத்தில் கொண்டு “கியூ.ஆர்” முறைமை மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக வும் அவர் கூறினார். (அ)

# நாட்டின் விவசாயத்துறை பாரிய உர நெருக்கடியில்!

கொழும்பு, மார்ச் 16

எதிர்வரும் சிறுபோகம் மற்றும் பெரும்போகத்திற்குத் தேவையான நெற்பயிர்ச்செய்கை உள்ளிட்ட ஒட்டுமொத்த விவசாயத் துறைக்கும் தேவையான உரத்தின் அளவைப் பெற்றுக்கொள்ள முடியாமையினால், பாரியதொரு நெருக்கடி உருவாகி வருவதாக தேசிய விவசாயிகள் ஒன்றியத்தின் தலைவர் அனுராத தென்னகோன் தெரிவித்துள்ளார்.

தேசிய விவசாய ஒற்றுமை சங்கம் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மத்திய கிழக்கில் நிலவும் போர்ச் சூழல் காரணமாக உர இறக்குமதி மேலும் சிக்கலாகியுள்ளதுடன், உள்நாட்டு களஞ்சியசாலைகளில் போதிய கையிருப்பு இல்லாதது ஒரு பாரிய பிரச்னையாக உருவெடுத்துள்ளது.

யூரியாவின் ஒட்டுமொத்தத் தேவை சுமார் 5,50,000 மெட்ரிக் டன்களாகும். ஆனால், தற்போது நாட்டில் போதிய உரக் கையிருப்பு இல்லை. 5,50,000 மெற்றிக் தொன் உரத்தைச் சேமித்து வைப்பதற்கான வசதிகள் அரசிடமோ அல்லது தனியார் துறையிடமோ இல்லை. தற்போது எமக்குக் கிடைத்துள்ள தகவல்களின்படி, நாட்டில் சுமார் 60,000 மெற்றிக் தொன் யூரியா மட்டுமே கையிருப்பில் உள்ளது. அடிப்படை உரம் மற்றும் மேலும் உள்ளிட்ட ஒட்டுமொத்த வருடாந்த உரத் தேவை சுமார் 650,000 மெற்றிக் தொன்களாகும்.

தற்போது போதுமான கையிருப்பு இல்லாததால், வரவிருக்கும் போகத்தில் விவசாயிகள் பாரிய உர நெருக்கடியைச் சந்திக்க நேரிடும். உலகச் சந்தையில் ரஷ்யாவிடமிருந்து ஒரு மெற்றிக் தொன் உரத்தை 200 டாலருக்கும் குறைவான விலைக்குப் பெற முடியும் என சில நிறுவனங்கள் எங்களிடம் தெரிவித்துள்ளன. ஆனால் அரசாங்கம் அந்த வாய்ப்பைத் தவிர்த்துவிட்டு, உலகச் சந்தையில் விலை எவ்வளவு இருந்தாலும் ஒரு மெட்ரிக் டன் உரத்தை 400 டொலர் கொடுத்து வாங்க முற்படுகிறது.

கடந்த காலங்களில் உலகச் சந்தையில் உரத்தின் விலை 325 முதல் 350 டொலர்களாக இருந்தபோதும், இவர்கள் 400 டொலர் கொடுத்தே கொள்வனவு செய்தனர். இதன் பின்னணியில் பெரியளவிலான ஊழல் மற்றும் மாபியா செயற்பாடுகள் இடம்பெறுகின்றன

இம்முறை விவசாயிகளுக்கு உரம் பெற்றுக்கொள்வதில் கடும் சவால்கள் உள்ளன. தற்போது ஒரு மூடை யூரியா உரத்தின் விலை 7,800 முதல் 8,000 ரூபாவாக இருந்தால், எதிர்வரும் காலங்களில் அது 15,000 முதல் 20,000 ரூபா வரை அதிகரிக்க வாய்ப்புள்ளது. அந்த விலைக்குக் கூட உரத்தைப் பெற்றுக்கொள்வது கடினமாகலாம். இலங்கையின் வருடாந்த உரத் தேவையைப் பார்த்தால், நெற்செய்கைக்கு மாத்திரம் பெரும் போகத்தில் சுமார் 850,000 ஹெக்ரேயர்களும், சிறு போகத்தில் சுமார் 400,000 ஹெக்ரேயர்களும் பயிரிடப்படுகின்றன. மொத்தமாக ஆண்டுக்கு சுமார் 1,350,000 ஹெக்ரேயர் பரப்பளவில் நெற்செய்கை முன்னெடுக்கப்படுகிறது. இதற்கு மாத்திரம் சுமார் 330,000 மெற்றிக் தொன் யூரியா உரம் தேவைப்படுகிறது - என்றார். (அ)

# இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் ஆள் பற்றாக்குறையை நிவர்த்திக்க ஏற்பாடு

கொழும்பு, மார்ச் 16

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் நிலவும் ஆள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில், சுமார் ஆயிரம் புதிய பணியாளர்களை இணைத்துக் கொள்வதற்கு பொது நிதி பற்றிய பாராளுமன்ற தெரிவுக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கான சட்ட ரீதியான தடைகளை நீக்கி, ஆணைக்குழுவின் சுயாதீனமான நியமன அதிகாரத்தை உறுதிப்படுத்தும் சட்டமா அதிபரின் ஆலோசனையும் இதன்போது சமர்ப்பிக்கப்பட்டது.

கலாநிதி ஹர்ஷ டி சில்வா தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், 2023ஆம் ஆண்டு ஊழல் எதிர்ப்புச் சட்டத்தை அமுல்படுத்துவதில் நிலவும் தாமதங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ரங்க திஸாநாயக்க, ஆணைக்குழுவின் செயற்பாடுகளை மாவட்ட ரீதியாக விரிவுபடுத்தத் திட்டமிட்டுள்ளதாகவும், தற்போது விசாரணைகளுக்காக மக்கள் கொழும்புக்கு வர வேண்டிய துரதிர்ஷ்டவசமான நிலை காணப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

971 புதிய பணியிடங்களுக்கான ஆள்சேர்ப்பு நடைமுறைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில், தேர்ந்தெடுக்கப்படும் பணியாளர்களுக்கு விசேட பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

மேலும், தகுதிவாய்ந்த நிபுணர்களை ஈர்க்கும் வகையில் போட்டித்தன்மை மிக்க சம்பளக் கட்டமைப்பை உருவாக்குவது குறித்தும் இக்கூட்டத்தில் அவதானம் செலுத்தப்பட்டது.

குறிப்பாக, ஆணைக்குழுவின் உயர் அதிகாரிகளின் சம்பளத்தை மேல்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களின் சம்பளத்திற்கு நிகராக அமைப்பது தொடர்பாக ஜனாதிபதி அலுவலகம் மற்றும் அமைச்சரவையின் பரிசீலனைக்கு அனுப்ப தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ)

# பெருமளவிலான பீடி இலைகள் பொலிஸாரால் கைப்பற்றல்!

கொழும்பு, மார்ச். 16

துங்கல்பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெப்பும்கொட கடற்கரைப் பகுதியில், சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட பீடி இலைகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

துங்கல்பிட்டிய பொலிஸ் நிலைய அதிகாரிகளால் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போதே குறித்த பீடி இலைகள் லொறி ஒன்றில் ஏற்றப்பட்டிருந்த நிலையில் கைப்பற்றப்பட்டன.

சுமார் 1,654 கிலோ 615 கிராம் பீடி இலைகள் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸா, தெரிவித்தனர். குறித்த பீடி இலைகளை கடல் வழியாக கொண்டு வருவதற்கு பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் படகு ஒன்றையும் பொலிஸார் கைப்பற்றினர்.

சந்தேகநபர்கள் தப்பியோடிய நிலையில், அவர்களை கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# பெண்களின் உரிமையை வலியுறுத்தி மட்டக்களப்பில் கவனவீர்ப்பு பேரணி



மட்டக்களப்பு, மார்ச். 16

சுயாதீன தேசிய பெண்கள் ஆணைக்குழுவை செயல்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியும் பெண்களின் உரிமையை வலியுறுத்தியும் நேற்று முன்தினம் மட்டக்களப்பில் கவனவீர்ப்பு பேரணி முன்னெடுக்கப்பட்டது.

சர்வதேச பெண்கள் தினத்துக்கு இணைவாக நிலையான வாழ்தலைநோக்கி ஒன்றிணைவோம் என்னும் தொனிபொருளில் சூரிய பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் பெண்கள் அமைப்புகளுடன் இணைந்து இந்த பேரணி ஏற்பாடு செய்யப்பட்டது.

இதனை முன்னிட்டு சூரிய வள நிலையத்திலிருந்து பேரணி ஆரம்பமாகி மட்டக்களப்பு நகர் ஊடாக பறை மேளங்கள் முழங்க பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய பதாகைகள் மற்றும் பல்வேறு கோரிக்கைகளை தாங்கிய பெண்களின் வினோத உடைகள் அணிந்தவாறு பேரணியில் கலந்து கொண்டனர். (எ)

# நாட்டில் தட்டுப்பாடற்ற சமையல் எரிவாயு விநியோகத்தை உறுதிப்படுத்த நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 16

நாட்டில் சமையல் எரிவாயு தட்டுப்பாடற்ற விநியோகத்தை உறுதிப்படுத்துவதற்காக, லிட்ரோ மற்றும் லாப்ஸ் ஆகிய இரண்டு நிறுவனங்களும் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை எட்டியுள்ளன.

இதன்படி, ஹம்பாந்தோட்டையில் அமைந்துள்ள லாஃப்ஸ் நிறுவனத்தின் முனையத்தில் உள்ள 30,000 மெட்ரிக் தொன் கொள்ளளவைக் கொண்ட களஞ்சிய வசதியில், பாதியை லிட்ரோ நிறுவனம் பயன்படுத்திக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கில் நிலவும் போர் பதற்றம் மற்றும் சர்வதேச கப்பல் போக்குவரத்து இடையூறுகளைக் கருத்திற் கொண்டு, நாட்டின் எரிவாயு கையிருப்பை பலப்படுத்துவதற்காக இந்த தற்காலிக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆரம்பகட்டமாக மூன்று மாதங்களுக்கு அமுலாகும் இந்த உடன்படிக்கையின் கீழ், லாஃப்ஸ் நிறுவனத்திற்கு உரிய கட்டணத்தைச் செலுத்தி லிட்ரோ நிறுவனம் தனது எரிவாயுவை அங்கு சேமித்து வைக்கவுள்ளது.

அதேவேளை, உள்நாட்டு எரிவாயு விநியோகத்தை சீராக முன்னெடுப்பதற்காக, லாஃப்ஸ் நிறுவனம் தனது ஏற்றுமதி ஒதுக்கீட்டில் 20 சதவீதத்திற்கும் அதிகமான அளவை உள்நாட்டுச் சந்தைக்குத் திருப்பவும் அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

தற்போது அமெரிக்காவிலிருந்து எரிவாயு விநியோகம் சீராக நடைபெற்று வருவதாகவும், மேலதிக கப்பல்கள் நாட்டை வந்தடையவுள்ளதால் சமையல் எரிவாயு விநியோகத்தில் எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்றும் இரு நிறுவனங்களும் உறுதிப்படுத்தியுள்ளன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 16.03.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.